


# “‘DRAVIDIAN STOCK’ என்பது வெறும் வார்த்தைகள் அல்ல..!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒருபகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தில் ‘I BELONG TO THE DRAVIDIAN STOCK’ என்ற தலைப்பில், கழக மகளிர் அணி சமூகவலைதளப் பொறுப்பாளர் மருத்துவர் ப.மீ.யாழினி அவர்கள் ஆற்றிய உரை:**

“I BELONG TO DRAVIDIAN STOCK – என்ற வார்த்தைகளை நாடாளுமன்றத்தில் பேரறிஞர் அண்ணா உச்சரித்தபோது நாடே அதிர்ந்தது. இப்போதும் சமூகவலைதள பக்கங்களில் ‘திராவிடியன் ஸ்டாக்’ என்று நம்மை அடையாளப்படுத்தினால் சங்கிகள் அலறுகிறார்கள்.

**தமிழர் பெரும்படை**

1938-இல் தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பை எதிர்த்து, தமிழர் பெரும்படை என்று ஒரு நடைப்பயணத்தை ஆரம்பித்தார்கள். திருச்சியிலிருந்து சென்னைக்கு நடந்தே வருகிறார்கள். சுட்டெரிக்கும் வெயிலில், 42 நாள் நடக்கிறார்கள். 234 கிராமங்களுக்குப் போகிறார்கள்; 70 நகரங்களுக்குப் போகிறார்கள். அங்கெல்லாம் 87 பொதுக் கூட்டங்களை நடத்தி முடித்துதான் அவர்கள் சென்னைக்கு வருகிறார்கள்.

இந்த நடைப்பயணத்தில் நிறைய தலைவர்கள் இருந்தாலும், ஒரேயொரு பெண் தலைவர்தான் இருந்தார். அவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். தேவதாசி முறையை ஒழிப்பதற்கான போராட்டமாக இருக்கட்டும், குலக்கல்வி திட்டத்தை ஒழிப்பதற்கான போராட்டமாக இருக்கட்டும், இந்தித் திணிப்பை எதிர்த்த போராட்டமாக இருக்கட்டும், இந்தப் போராட்டங்களில் எல்லாம் களத்தில் இறங்கி போராடி, அந்தப் போராட்டங்களை வெற்றி அடையச் செய்தவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.

**மகளிர் மன்றம்**

பல ஆண்டுகளுக்குப் பிறகு, 1956-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தின், மகளிர் மன்றத்தின் தொடக்க விழாவுக்கு வரும்போது, இராமாமிர்தம் அம்மையாருக்கு வயது அதிகமாகிவிட்டது; உடல்நலம் குன்றிவிட்டது. ஆனாலும், எழுச்சியுடன் உரையாற்றி, அவர் கையில் ஏந்தியிருந்த கொள்கைச் சுடரை, அடுத்த தலைமுறை திராவிடப் பெண்கள் கையில் ஒப்படைத்த மேடைதான் மகளிர் மன்றத்தின் தொடக்க விழா. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் – SHE BELONGS TO DRAVIDIAN STOCK.

**எதிர்காலத்துக்கான போராட்டம்**

அப்படி 1956-இல் தொடங்கப்பட்ட மகளிர் மன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சத்தியவாணிமுத்து. 1953-ஆம் ஆண்டு ஜூலை 14-இல் மும்முனைப் போராட்டத்தைக் கழகம் அறிவித்தது. போராட்டம் நடப்பதற்கு முன்தினமே பேரறிஞர் அண்ணாவையும் முக்கிய தலைவர்களையும் கைது செய்து விடுகிறார்கள். தலைவர் கலைஞர் அவர்களும் போராட, கல்லக்குடிக்குச் சென்றுவிட்டார். ஆனாலும் அறிவித்தபடி, 1953, ஜூலை 14-இல் போராட்டம் நடக்கிறது. அன்றைய முதலமைச்சர் ராஜாஜி அவர்களின் வீட்டுக்கு வெளியே முற்றுகைப் போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் அம்மையார் சத்தியவாணி முத்து அவர்கள்.

அப்போது அம்மையார் சத்தியவாணி முத்து அவர்கள் கர்ப்பிணிப் பெண்ணாக இருந்தார். வயிற்றில் இருக்கிற குழந்தையைப் பற்றிக்கூட கவலைப்படாமல், குலக்கல்வி முறையை எதிர்த்து, தமிழ்நாட்டுக் குழந்தைகளின் எதிர்காலத்துக்குப் போராடியவர்தான் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள். பிறகு, சட்டமன்ற உறுப்பினராகவும் அண்ணா மற்றும் கலைஞர் அமைச்சரவையில் அமைச்சராகவும் இருந்த அன்னை சத்தியவாணி முத்து அம்மையாரும் திராவிட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்தான். SHE BELONGS TO DRAVIDIAN STOCK.

**போராட்டத்தின் எரிபொருள்**

1938-ஆம் ஆண்டு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு அம்மையார் புவனேஸ்வரி நடராஜன் அவர்கள் சிறைக்குச் செல்கிறார், என்.வி.நடராஜன் அவர்களின் மனைவி. அப்போது புவனேஸ்வரி அம்மையாரின் கையில் ஆறுமாதக் கைக்குழந்தை. அன்றைய முதலமைச்சர் அவர்கள், ‘குழந்தைக்கு பால் கொடுக்க வக்கில்லாதவர்கள் எல்லாம் பாலுக்காகவும் சோற்றுக்காகவும்தான் சிறைக்கு வருகிறார்கள்’ என்று நக்கலாகப் பேசினார். அந்த நக்கல் நையாண்டியையும் போராட்டத்தின் எரிபொருளாக மாற்றி, அந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்தவர் அம்மையார் புவனேஸ்வரி நடராஜன் அவர்கள். புவனேஸ்வரி நடராஜன் அம்மையார் – SHE BELONGS TO DRAVIDIAN STOCK.

1956-இல் மகளிர் மன்றத் தொடக்கவிழா பற்றி சொன்னேன் இல்லையா, அந்த விழா மேடையில் ‘தொட்டிலை ஆட்டும் கைதான் தொல்லுலகத்தை ஆளும் கை என்று உலகத்துக்கு உணர்த்த வேண்டும்’ என்று ஒரு சின்னஞ்சிறிய மாணவி பேசினார். அந்த மாணவிதான் பின்னாளில் மகளிர் அணித் தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராகப் பொறுப்பேற்ற சற்குணம் பாண்டியன் அவர்கள்.



**மருத்துவர் ப.மீ.யாழினி**
**கழக மகளிர் அணி சமூகவலைதளப் பொறுப்பாளர்**

**வரலாற்றுச் சிறப்புமிக்க பேரணி**

1988-இல் சென்னையில் தேசிய முன்னணியின் மாநாடு நடைபெற்றது. அதற்கு வி.பி.சிங் அவர்கள் வந்திருந்தார். அந்த மாநாட்டைப் பற்றிப் பேசும்போது எல்லாம் நமக்கு நினைவுக்கு வருகிற ஒரு விஷயம், நம் இன்றைய முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் அன்று இளைஞர் அணிச் செயலாளராக இருந்து நடத்திய பேரணி. அந்த ராணுவக் கட்டுப்பாட்டைப் பார்த்து தேசிய தலைவர்கள் எல்லாருமே பிரமித்துப் போனார்கள். இன்றைக்கு வரைக்கும் பேசப்படக்கூடிய ஒரு விஷயம் அந்தப் பேரணிதான்.

அதே மாநாட்டில் அம்மையார் சற்குணபாண்டியன் அவர்கள் கிட்டத்தட்ட 2,000 மகளிரை அதே ராணுவக் கட்டுப்பாட்டோடு பேரணியாக அழைத்துச் சென்றார். தலைவர் கலைஞர் அவர்கள் அந்தப் பேரணியைப் பார்த்து ரொம்பவே மகிழ்ந்து போனார். சற்குணபாண்டியன் அம்மையாரை மேடைக்கு அழைத்து பாராட்டி, தங்கச் சங்கிலியைப் பரிசளித்தார். அந்த அம்மையார் சற்குண பாண்டியன் அவர்களும் SHE BELONGS TO DRAVIDIAN STOCK.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக 1957-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் குளித்தலை தொகுதியில் போட்டியிட்டார். அப்போது அவருக்காக அந்தத் தொகுதி முழுவதும் பிரச்சாரம் செய்தவர்கள் பொற்செல்வியும் அவரின் கணவர் இளமுருகுவும். ‘என் தேர்தல் வெற்றிக்குக் காரணம் இந்தத் தம்பதிதான்’ என்று கலைஞர் சொன்னார். பொற்செல்வி – SHE BELONGS TO DRAVIDIAN STOCK.

இப்போது நம் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி அவர்கள் திராவிடக் கொள்கைகளை டெல்லி நாடாளு மன்றத்தில் துணிச்சலாகப் பேசுகிறார்கள். மழை வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்படும்போது ஓடோடிப்போய் துயர் துடைக்கிறார். SHE BELONGS TO DRAVIDIAN STOCK. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

**நூற்றாண்டுக்கு முன்பு…**

ஐயா சுப.வீரபாண்டியனின் ‘அறிவுத்தேடல்’ நூலில் உள்ள செய்தி இது. நீதிக்கட்சி ஆட்சிக்கு வரும்போது மேலவையில் ஒரு பெண் உறுப்பினர்கூட கிடையாது. அப்போது அம்மையார் முத்துலட்சுமி ரெட்டி அவர்களை மேலவை உறுப்பினராக நியமனம் செய்வதுடன் மேலவையின் துணைத் தலைவராவும் ஆக்குகிறார்கள். அப்போது மேலவையின் உறுப்பினராக இருந்த மாமனிதர் எல்.சி.குருசாமி அவர்கள், ‘எப்படி ஒரு கொடூரமான கோடைக் காலத்தின் தாகத்தைத் தணிப்பதற்கு ஒரு மடக்கு தண்ணீர் போதாதோ, அதேபோலத்தான் இன்றைக்கு நம் மேலவையும் இருக்கிறது, ஒரேயொரு பெண்தான் இருக்கிறார். ஆனால், ஒரு மடக்காவது நமக்கு கிடைத்திருக்கிறதே என்று நான் சந்தோஷப்படுகிறேன்’ என்று பேசினார். இது நடந்தது 1923.

அடுத்த ஆண்டு 1924-இல் திருக்குவளையில் பிறந்த கலைஞர், தலைவராகி பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தார். உள்ளாட்சியில் 33% இட ஒதுக்கீடு முதல் கழகத்தின் எல்லாப் படிநிலைகளிலும் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் வரை அளித்தார். 2006-இல் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர். அப்போதே ஆறு மாநகராட்சிகளில் மூன்று மாநகராட்சிகளில் பெண் மேயர்கள். இப்போதோ 50 சதவிகிதத்தையும் தாண்டிவிட்டோம்.

**என் அடையாளம்**

‘I BELONG TO DRAVIDIAN STOCK’ என்பது வெறும் வார்த்தைகள் அல்ல; அது ஓர் உணர்வு. உணர்வு என்பதையும் தாண்டி அது என் வேர், அது என் அடையாளம்.

ஏனென்றால், இந்தச் சமூகம் எங்களைத் தொடர்ச்சியாக நிராகரித்துக்கொண்டே இருந்தது. இந்த சனாதன தர்மம் எங்களை தொடர்ச்சியாக நிராகரித்துக்கொண்டே இருந்தது. அப்படி நிராகரித்தவர்களுக்கு முன், எந்த இடத்தில் சென்று உட்கார்ந்தால், எங்களை நிராகரிக்க முடியாதோ, அந்த இடத்தில் எங்களை அழைத்துச் சென்று உட்கார வைத்தது திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்தான்”

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

தினத்தந்தி

**‘தினத்தந்தி’ வெளியிட்ட ‘துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் சிறப்பு மல’ரில் ‘ஆலமரமாக நின்று அறிவுத் திருவிழாவை நடத்திய உதயநிதி ஸ்டாலின்’ என்ற கட்டுரையில் இருந்து…**

‘தி.மு.க. பவள விழா நிறைவையொட்டி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ‘அறிவுத் திருவிழா’ எனும் தி.மு.க. கொள்கைத் திருவிழாவை 9 நாள்கள் முன்னின்று நடத்தி முடித்து, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட கட்சியின் மூத்த நிர்வாகிகள் மட்டுமல்லாமல் எழுத்தாளர்கள், திராவிட வரலாற்று ஆய்வாளர்கள் என அத்தனை பேரின் பாராட்டையும் பெற்றுள்ளார் துணை முதல்-அமைச்சரும், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின்.

அரசியல், கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் மேன்மைக்காகத் தொடங்கப்பட்ட இயக்கத்தை அதே வேகத்தோடு, விவேகத்தோடு, உணர்ச்சியோடு, அக்கறையோடு கொண்டு செலுத்த வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்துடன் உதயநிதி ஸ்டாலினால் முன்னெடுக்கப்பட்ட இந்த ‘அறிவுத் திருவிழா’ திராவிட இயக்க வரலாற்றில் முக்கியமான நிகழ்வாக அமைந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

முற்போக்குச் சிந்தனைகளை முன்னெடுப்பது, இளைஞர்களிடம் அரசியல் உணர்வை வளர்த்தெடுப்பது, வாசிப்பை பரவலாக்குவது ஆகிய நோக்கங்களைக் கொண்ட அறிவுத் திருவிழாவை எல்லோரும் பாராட்டும்வகையில் நடத்திக் காண்பித்திருக்கிறார் உதயநிதி ஸ்டாலின்.’